# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

பொன்னி, 31 பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை,சென்னை–600 028.
http://www.tn.gov.in/appforms/artculture/iyal_isai_appform.pdf

நலிந்த நிலையில் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம்

நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மண்டல கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநரின் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

கலைத்துறையில் குறிப்பிடத்தக்க சிறப்புப் பணி புரிந்து தற்போது வருமானமின்றிச் சிரமத்துடன் வாழும் சிறந்த வயோதிகக் கலைஞர்கள் அரசு நிதியுதவி கோரி சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பம்

தங்களின் மார்பு அளவுள்ள புகைப்படம் ஒட்டவும்

இவ்விண்ணப்பத்தை முழுமையாகப் பூர்த்தி செய்து, வருவாய்த் துறை விசாரணை அறிக்கையை கோட்ட ஆட்சியர் / சார் ஆட்சியரின் பரிந்துரையுடன் (அலுவலக முத்திரையுடன்) மற்றும் விண்ணப்பத்தில் கேட்டுள்ள அனைத்து சான்றுகளையும் அவசியம் இணைத்து அனுப்ப வேண்டும்.

1. விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி

2. தங்களின் பிறந்த தேதியும்,வயதும் (பிறந்த தேதி, மாதம் ஆங்கில ஆண்டினைக் குறிப்பிடவும்) மாநகராட்சி / பேரூராட்சி / ஊராட்சியின் பிறப்பு இறப்பு பதிவு அலுவலரிடமிருந்து பெறப்பட்ட வயதுக்கான சான்றிதழ் அல்லது பள்ளிச்சான்று இணைத்து அனுப்ப வேண்டும். இவற்றில் எதுவும் இல்லை என்றால் சான்றொப்பம் பெற்ற குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை நகலினை இணைக்கலாம்.

3. தாங்கள் எந்தக் கலைப்பிரிவைச் சார்ந்தவர்கள்? (இசை / நாடகம் / நாட்டியம் / திரைப்படம் / கிராமியக்கலை / ஓவியம் / சிற்பம்)

4. தமிழக நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் தாங்கள் உறுப்பினராக உள்ளீரா ? ஆம் எனில், அதன் விவரம் மற்றும் பதிவு எண்ணைக் குறிப்பிடவும்.

5. தமிழக நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தில் ஓய்வூதியம் பெற்று வருபவரா ? ஆம் எனில், அதன் விவரத்தைக் குறிப்பிடவும்.

6. தாங்கள் வேறு ஏதேனும் (முதியோர் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம்) நிதியுதவி பெற்று வருபவரா ? ஆம் எனில், அதன் விவரத்தைக் குறிப்பிடவும்.

7. தாங்கள் முற்பட்ட வகுப்பினரா? பிற்பட்ட வகுப்பினரா? மிகவும் பிற்பட்ட வகுப்பினரா ? தாழ்த்தப்பட்ட வகுப்பினரா? பழங்குடியினரா ?

8. தமிழ்நாட்டியல் எத்தனை ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறீர்கள்?

9. தாங்கள் ஈடுபட்டுள்ள கலைக்காகச் செய்துள்ள குறிப்பிடத்தக்க சிறப்பான பணி விவரங்களைத் தகுந்த சான்றுகளுடன் குறிப்பிடவும், (தேவையெனில் விவரங்களைத் தனித்தாளில் குறிப்பிட்டு இணைக்கலாம்)

10. தாங்கள் எங்கு, யாரிடம் கலை பயின்றீர்கள்? தாங்கள் ஈடுபட்டுள்ள கலைத்துறையில் எத்தனை ஆண்டுகள் தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறீர்கள்? தாங்கள் எத்தனை நபர்களுக்குப் பயிற்சி அளித்திருக்கிறீர்கள் ? அவர்களது பெயர், விவரங்களைக் குறிப்பிடவும். (தேவைப்படின் தனித்தாளில் குறிப்பிட்டு இணைக்கவும்)

11. அரசாங்கம், ரசிகர்கள் அல்லது பிரபல கலை நிறுவனங்களிடமிருந்து தங்களுக்குப் பாராட்டு அல்லது சன்மானம் வழங்கப்பட்டிருந்தால் அவற்றின் விவரம் குறிப்பிடவும். சான்றிதழ்–களின் நகல்களை அவசியம் இணைக்கவும்.

12. தங்களையும்,தங்களுடைய கலைத்தகுதிகளைப் பற்றியும் நன்கு அறிந்தவர்களை (துங்கள் துறையில் பிரபலமாக உள்ள) இரண்டு கலைஞர்களிடமிருந்து, தங்களைப் பற்றிய பரிந்துரைகளைப் பெற்று இத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். பரிந்துரை வழங்கியுள்ள இரண்டு கலைஞர்களின் முகவரியையும் தவறாது குறிப்பிடவும், முக்கியமானது எனக் கருதப்படும் தாங்கள் பங்கேற்றுள்ள கலை நிகழ்ச்சிகளுக்கான அழைப்பு, அறிவிப்பு, விளம்பரம் ஆகியவற்றினையும், தாங்கள் பெற்றுள்ள பாராட்டிதழ்களின் நகல்கள் ஆகியவற்றினையும் விண்ணப்பத்துடன் அவசியம் இணைத்து அனுப்பவும்.

13. இத்திட்டத்தில் இதற்கு முன் நிதியுதவி கோரி விண்ணப்பித்திருந்தால் அதுபற்றிய விவரத்தைக் குறிப்பிடவும்.

14. தங்களது குடும்ப உறுப்பினர்கள் எத்தனை பேர்? தங்களுடன் சேர்ந்து வாழ்வோர் எத்தனை பேர்? தங்களுக்கும் அவர்களுக்கும் உள்ள உறவு முறை. அவர்கள் ஒவ்வொருவருடைய வயது, தொழில், வருமானம் ஆகியவற்றைக் குறிப்பிடவும். (தேவைப்படின் தனித்தாளில் குறிப்பிட்டு இணைக்கலாம்)

15. தங்கள் பெயரிலோ தங்களது மனைவி/கணவர் / மகன்/மகள் அல்லது தங்களுடன் சேர்ந்து வாழும் இதர குடும்ப உறுப்பினர்களின் பெயரிலோ உள்ள இடம்பெயராச் சொத்துக் களின் அமைவிடம், பரப்பளவு மற்றும் அதன் மதிப்பு ஆகியவை பற்றிய விவரங்கள்.

## உறுதிமொழி

மேலே கூறப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் நானறிந்த வரையில் முற்றிலும் உண்மையானவையே எனச் சான்றளிக்கின்றேன். உண்மைக்குப் புறம்பான தகவல் இருப்பின், மன்றத்தின் / அரசின் நடவடிக்கைக்கு சம்மதிக்கின்றேன்.

தேதி :

வயது :

ஊர் :

மாவட்டம் : (விண்ணப்பதாரரின் கையொப்பம்)

## வருவாய் சான்றிதழ்

(விசாரணை அலுவலரால் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும்)

1. விண்ணப்பதாரரின் பெயர், முகவரி, வயது அவருடைய தற்போதைய உடல்நிலை

2. விண்ணதாரர் கலைஞர்தான் என்பதற்கான ஆதாரம் சரி பார்க்கப்பட்டுள்ளதா?

3. விண்ணப்பதாரரின் வயது, பக்கம் எண்.1 வரிசை எண் 2ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் சரிபார்க்கப் பட்டுள்ளதா?

4. தற்போது விண்ணப்பதாரர் மேற்கொண்டுள்ள தொழில்? எவ்வாறு குடும்பம் நடத்துகிறார்? தற்போது கிடைக்கும் ஆண்டு வருவாய் மற்றும் பிற வழிகளில் வருவாய் ஏதேனும் இருப்பின் அது பற்றிய சரியான விவரம்

5. விண்ணப்பதாரர் வேறு ஏதேனும் நிதியுதவி (முதியோர் ஓய்வூதியம் / நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய ஓய்வூதியம்) பெற்று வருகின்றாரா ?

6. விண்ணப்பதாரரின் மனைவி, கணவர், மகன், மகள் மற்றும் மனுதாரருடன் சேர்ந்து வாழும் இதர குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை, அவர்களுடைய வருமானம் பற்றிய விவரங்கள்

7. விண்ணப்பதாரர், அவர்தம் குடும்பத்தினர், அவரைச் சார்ந்தோர் பெயரிலுள்ள வீடு, நிலம், சொத்து ஆகியவற்றின் விலை மதிப்பு மற்றும் அவற்றிலிருந்தும் பிற வழிகளிலிருந்தும் கிடைக்கும் ஆண்டு வருவாய் தொடர்பான விவரங்கள்

இடம்:

தேதி :

வட்டாட்சியர்:

அலுவலக முத்திரை: வட்டாட்சியர்
(விசாரணை அலுவலரின் கையொப்பம்)

## வருவாய் கோட்ட ஆட்சியர் / சார் ஆட்சியர் பரிந்துரை

பரிந்துரைகளும், ஏனைய கருத்துகளும்

இடம் :

தேதி :

அலுவலக முத்திரை : கோட்ட ஆட்சியர் / சார் ஆட்சியர் கையொப்பம்

---

(விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்படும் அனைத்து ஆவணங்களும் ஆய்வு செய்யப்பட்ட பின்னர் அதனைத் தங்களது பரிந்துரையோடு விண்ணப்பத்துடன் தவறாது இணைத்து அனுப்பப்பட வேண்டும்)